**பவானிசாகர் அணை ர்மட்டம் 66.02 அடி**

First Published : 08 Jun 2010 09:34:05 AM IST

ஈரோடு, ஜூன் 7: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 66.92 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 825 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 9.71 டிஎம்சி.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 77.84 அடி**

First Published : 08 Jun 2010 09:31:27 AM IST

சேலம், ஜூன் 7: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 77.84 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 6,503 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,295 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 39.83 டி.எம்.சி.

**மேட்டூர் அணை ஜூன் 12-ல் திறக்க வாய்ப்பு**

First Published : 08 Jun 2010 09:27:56 AM IST

சேலம், ஜூன் 7: மேட்டூர் அணை ஜூன் 12-ம் தேதி திறக்க வாய்ப்பு உள்ளதாக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் கட்டடப் பணிகளை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் கட்டடப் பணிகள் 95 சதவீதம் முடிவடைந்துவிட்டது. ஆகஸ்ட் 20-ம் தேதி திறப்பு விழா நடைபெற உள்ளது. இதில் முதலமைச்சர் கருணாநிதி, மத்திய, மாநில அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இதே நாளில் புதிய ஆட்சியர் அலுவலக வளாகம், மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூடுதல் கட்டடம், செவிலியர் பயிற்சிக் கூடம், தங்கும் விடுதி மற்றும் மாவட்டம் முழுவதும் நிறைவடைந்த பணிகளின் திறப்பு விழா நடைபெறுகிறது.

திறப்பு விழாவுக்காக மருத்துவமனையின் எதிரில் உள்ள இடத்தை சுத்தம் செய்து சமப்படுத்தும் பணிகளை விரைவில் தொடங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விழா மேடை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. திறப்பு விழாவுக்கு ஒரு மாதம் முன்னதாகவே சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டடப் பணிகள் நிறைவடையும்.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்கு அணை திறக்கப்படும். அணையில் இப்போது 77 அடி தண்ணீர் உள்ளது. நீர் வரத்து சுமார் 6 ஆயிரம் கன அடியாக உள்ளது. இதே நிலை நீடித்தால் ஜூன் 12-ல் அணை திறக்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) வ.கலை அரசி, மாநகராட்சி மேயர் ரேகா பிரியதர்ஷிணி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் மோகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**மேட்டூர் அணை ஜூன் 12-ல் திறக்க வாய்ப்பு**

First Published : 08 Jun 2010 09:27:56 AM IST

சேலம், ஜூன் 7: மேட்டூர் அணை ஜூன் 12-ம் தேதி திறக்க வாய்ப்பு உள்ளதாக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் கட்டடப் பணிகளை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் கட்டடப் பணிகள் 95 சதவீதம் முடிவடைந்துவிட்டது. ஆகஸ்ட் 20-ம் தேதி திறப்பு விழா நடைபெற உள்ளது. இதில் முதலமைச்சர் கருணாநிதி, மத்திய, மாநில அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இதே நாளில் புதிய ஆட்சியர் அலுவலக வளாகம், மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூடுதல் கட்டடம், செவிலியர் பயிற்சிக் கூடம், தங்கும் விடுதி மற்றும் மாவட்டம் முழுவதும் நிறைவடைந்த பணிகளின் திறப்பு விழா நடைபெறுகிறது.

திறப்பு விழாவுக்காக மருத்துவமனையின் எதிரில் உள்ள இடத்தை சுத்தம் செய்து சமப்படுத்தும் பணிகளை விரைவில் தொடங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விழா

மேடை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. திறப்பு விழாவுக்கு ஒரு மாதம் முன்னதாகவே சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டடப் பணிகள் நிறைவடையும்.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்கு அணை திறக்கப்படும். அணையில் இப்போது 77 அடி தண்ணீர் உள்ளது. நீர் வரத்து சுமார் 6 ஆயிரம் கன அடியாக உள்ளது. இதே நிலை நீடித்தால் ஜூன் 12-ல் அணை திறக்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) வ.கலை அரசி, மாநகராட்சி மேயர் ரேகா பிரியதர்ஷிணி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் மோகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**மாசுபடும் நீர்நிலைகள்**

நமது நிருபர்

First Published : 08 Jun 2010 01:53:35 AM IST



தூர்வாரப்படாத நிலையில் வேலிகாட்டாமணக்கு மற்றும் வெங்காயத் தாமரைச் செடிகள் நிறைந்துள்ள வேதாரண்யத்தை அடுத்த வாய்மேடு - பஞ்சநதிக்குளம் பகுதி முள்ளியாறு வடிகால்.

வேதாரண்யம் : நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் உள்ள பாசனம் மற்றும் வடிகால் ஆறுகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் வளர்ந்து வெள்ளத் தேக்கம் போன்ற பாதிப்பை ஏற்படுத்தி, சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வெங்காயத் தாமரைச் செடிகளை முழுமையாக அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

வேதாரண்யம் பகுதி வழியாகச் செல்லும் முள்ளியாறு, மானங்கொண்டான் ஆறு, அடப்பாறு, சக்கிலியன் வாய்க்கால், நல்லாறு, அரிச்சந்திரா நதி உள்ளிட்ட முக்கிய வடிகால் ஆறுகள் கடலில் இணைகின்றன. இதே ஆறுகளின் ஒரு பகுதி பாசனப் பகுதியாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆறுகளிலும், அவற்றை சார்ந்துள்ள நீர் நிலைகளிலும் வெங்காயத் தாமரைச் செடிகள் அதிக அளவில் காணப்படுகின்றன. காலத்தில் கட்டுப்படுத்தப்படாததால் அவற்றின் வளர்ச்சியும், பரவும் பரப்பளவும் வேகமாக அதிகரித்து வருகிறது.

இதனால் சீரான நீர்ப்பாசன முறையில் பிரச்னை ஏற்படுகிறது. அத்துடன், பருவ மழைக் காலத்தில் செடிகளின் அடர்த்தியால் தண்ணீர் வடிவது தேக்கமடைந்து, வெள்ளப் பாதிப்புக்கான ஒரு காரணியாகவும் அமைந்து விடுகிறது.

இந்த வெங்காயத் தாமரைச் செடிகளை முற்றிலுமாக அகற்றவேண்டும் என பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து அரசை வலியுறுத்தி வருகின்றன. அரசும் இதன் பாதிப்பு தன்மையை நன்கு உணர்ந்துள்ள போதிலும், இவற்றை அகற்றுவதில் தொடர்ந்து பின்னடைவு உள்ளது.

வெள்ளம் போன்ற அவசரக் காலங்களில் இதன் மீது ஏற்படும் கூடுதல் கவனம் காலப்போக்கில் கிடப்பில் போடப்படுகிறது. நூறு நாள் வேலை போன்ற திட்டப் பணிகளை பயன்படுத்தி இந்தச் செடிகளை அகற்ற மாவட்ட ஆட்சியரின் வாய்வழி உத்தரவு இருந்த போதிலும் பல இடங்களில் அதற்கு சாத்தியமில்லாத நிலை உருவாகியுள்ளது.

கோடைகாலத்தில் இந்தப் பகுதி நீர் நிலைகளில் கிடைக்கும் தண்ணீர்தான் மக்கள் குளிப்பதற்கும், கால்நடைகள் குடிப்பதற்கும் முன்னர் பயன்பட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளாக வெங்காயத் தாமரைச் செடிகள் நிறைந்திருப்பதால் தண்ணீர் விரைவாக மாசடைந்து பயனற்று விடுகிறது.

அதனால் ஒரு விதமான துர்நாற்றம் வீசுவதுடன், நோய்த் தொற்றை ஏற்படுத்தும் கொசுக்களின் உற்பத்திக் கூடமாகவும் மாறிவருகிறது. இதன் மீது பொது சுகாதாரத் துறை உடனடி கவனம் செலுத்துவது அவசியமாகும்.

வழக்கமாக பெயரளவில் நடைபெறும் தூர்வாரும் பணியும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ள வடிகால் ஆறுகளில் இதன் தாக்கம் கூடுதலாகவே உள்ளது.

பாசனத்தைப் பாதிக்கச் செய்வதுடன், வெள்ளப் பாதிப்பையும் ஏற்படுத்தி சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வெங்காயத் தாமரைச் செடிகளை முழுமையாக அதற்ற அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

**வறண்டு வரும் அணைகளால் குடிநீர்த் தட்டுப்பாடு: கடலில் கலந்து வீணாகும் வெள்ள நீர்**

First Published : 08 Jun 2010 01:51:35 AM IST



நீர்மட்டம் குறைந்த அளவில் பாபநாசம் அணை.

அம்பாசமுத்திரம் : திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கடனாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகள் வறண்டுவிட்டன. இதனால், குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்துள்ளது. எனவே, பருவ மழை பெய்தால்தான் குடிநீர், விவசாயத் தேவைகளை நிறைவு செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை நீராதாரத்தைக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டப்பட்ட பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகள் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர், பாசனத் தேவைகள் பூர்த்தியாகின்றன. வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழைக் காலங்களில் நீர்வரத்து பெற்றுள்ளதால் தாமிரபரணி நதி வற்றாத நதியாக திகழ்கிறது. 2009-ம் ஆண்டு வழக்கத்தைவிட பருவ மழை அதிகமாக பெய்ததால் இம் மாவட்டத்தில் உள்ள அணைகள் முன் கூட்டியே நிரம்பின. பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிரம்பிய போதிலும் கோடைக்காலமான ஏப்ரல், மே மாதத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்தது.

மழைக் காலங்களில் நீர் வீணாகக் கடலில் கலப்பதாலும், ஏப்ரல், மே மாதங்களில் முன் கார் பருவ சாகுபடி செய்ய அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதாலும் பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைகிறது. இவ்வணைகளின் நீர்மட்டம் 60 அடியாக குறையும்போது குடிநீர்த் தேவைக்காக அணைகளில் நீரை சேமித்து வைக்க வேண்டிய நிலை உள்ளது.

கடந்த மார்ச் 31-ம் தேதி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 89.80 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 101.54 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 89.65 அடியாகவும் இருந்தது. ஜூன் 6-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 54.95 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 64.47 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டும் 60.80 அடியாகவும் குறைந்துவிட்டது.

குடிநீர், பாசனத் தேவைக்காக பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து 700 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைகளுக்கு நீர்வரத்து இல்லை. இம்மாதம் 1-ம் தேதி முதல் கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து வடக்கு, தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய் மூலம் பாசனம் பெறும் 6,000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையம் கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 46,000 ஏக்கர் நிலங்களுக்கும் அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.
திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்துள்ளது. 85 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 20 அடியாக இருந்தது.
அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்ததால் அணை மூடப்பட்டது. அணை மூடப்பட்டதால் கருணை ஆறு வறண்டது.

இதனால் கருணை ஆற்றங்கரையில் உள்ள சிவசைலம், மேலஆம்பூர், கீழஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, காக்கநல்லூர், பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில், அடைச்சாணி, ரங்கசமுத்திரம், இடைகால் உள்ளிட்ட ஊராட்சிகளுக்கு உள்பட்ட 50-க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. கருணை ஆற்றின் கடைசிப் பகுதியான பிரம்மதேசம், மன்னார்கோவில், வாகைகுளம் ஊராட்சிப் பகுதிகளில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது.

தென்மேற்குப் பருவ மழை பெய்தால்தான் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர், பாசனத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். இன்னும் ஓரிரு நாளில் பருவ மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் விரிவாக்க மையங்களில் குறைகேள் பதிவேடு வசதி**

First Published : 07 Jun 2010 09:33:37 AM IST

நாமக்கல், ஜூன் 6: நவீன வேளாண்மை மற்றும் அரசின் மானியத் திட்டங்களில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்ள ஏதுவாக, விவசாயிகள் குறைகேள் பதிவேடு வசதி துவங்கப்பட்டுள்ளது.
மாவட்டத்தின் அனைத்து வட்டார தலைமையிடங்களிலும் செயல்பட்டு வரும் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், நுண்ணூட்டங்கள், உயிர் உரங்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப செய்திகள் வழங்கப்படுகின்றன.

மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்த செயலாக்க நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.
நவீன வேளாண் மற்றும் மானியத் திட்டங்களில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் நிர்த்தி செய்து கொள்ள, ஒவ்வொரு வட்டார வேளாண் விரிவாக்க மையத்திலும் விவசாயிகள் குறைகேள் பதிவேடு துவங்கப்பட்டுள்ளது.
வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் பராமரிக்கப்படும் சிறப்பு பதிவேட்டில் கோரிக்கைகளைப் பதிவு செய்து கொள்ளலாம். அந்தந்த வட்டார களப்பணியாளர்கள் இந்தப் பதிவேட்டை தினமும் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட விவசாயிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

**பயறு வகை சாகுபடி சிறப்பு முகாம்**

First Published : 08 Jun 2010 09:47:01 AM IST

திருச்செங்கோடு, ஜூன் 7:திருச்செங்கோடு வட்டாரத்தில் பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு சாகுபடி முகாம்கள் நடத்தப்பட உள்ளன.
÷இது குறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இய்க்குனர் (பொறுப்பு) எஸ். ராதாமணி கூறியது:-
÷திருச்செங்கோடு வட்டாரத்தில் பயறு வகை சாகுபடியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.
ஜூன் 9-ம் தேதி கருமாபுரம், தோக்கவாடி, சித்தளந்தூர், பிரிதி ஆகிய பகுதிகளில் முகாம் நடக்கின்றன.
÷ திருமங்கலம், தோ. கவுண்டம்பாளையம், புதுபுளியம்பபட்டி, மொளசி ஆகிய பகுதிகளில் 10-ம் தேதி (வியாழக்கிழமை) முகாம் நடத்தப்படும். ஜூன் 11-ல் வட்டூர், ஆனங்கூர், சிறுமொளசி, இறையமங்கலம். 14-ல் டி, புதுப்பாளையம், மோடமங்கலம், அணிமூர். 15-ல் ஓ.ராஜாபாளையம், ஏமப்பள்ளி, ஆண்டிபாளையம் கிராமங்களிலும் நடக்க உள்ளன.
÷மேலும், ஜூன் 16-ம் தேதி தண்ணீர்பந்தல்பாளையம், சிக்கநாய்கன்பாளையம், வரகூராம்பட்டி.
÷17-ல் தேவனாங்குறிச்சி மற்றும் கருவேப்பம்பட்டியிலும் முகாம்கள் நடக்கின்றன. இந்த முகாம்களில் விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட உள்ளன. ஆகவே அனைத்து விவசாயிகளும் தவறாமல் முகாம்களில் கலந்து கொணடு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றார் அவர்.

**வெங்காயம் விலை உயர்வு!**

First Published : 07 Jun 2010 12:20:47 PM IST

போச்சம்பள்ளி, ஜூன் 6: போச்சம்பள்ளி ஞாயிறு வாரச் சந்தையில் சின்ன வெங்காயம் 1 கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம் இது ரூ.15-க்கு விற்பனையானது.

மற்ற காய்கறிகளின் விலை விவரம் (1 கிலோ):

பெரிய வெங்காயம்-ரூ.10, சிறிய ரக தக்காளி ரூ.20, முதல் ரக தக்காளி-ரூ.30, பீன்ஸ்-ரூ.40, கேரட்-ரூ.40, சர்க்கரைவள்ளி கிழங்கு-ரூ.15, கோஸ்-ரூ.20, சிக்கடி-ரூ.20.

கொத்தமல்லி 1 கட்டு-ரூ.20, 2 கிலோ வெல்ல உருண்டை-ரூ.60.

**மா உற்பத்தியாளர்கள் சங்க சிறப்புக் கூட்டம்: ன்று நடக்கிறது**

First Published : 07 Jun 2010 12:20:31 PM IST

போச்சம்பள்ளி, ஜூன் 6: அகில இந்திய இடை பருவ மா உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் போச்சம்பள்ளியில் திருப்பத்தூர் சாலையில் உள்ள கணேஷ் திருமண மண்டபத்தில் திங்கள்கிழமை மதியம் 2 மணிக்கு நடக்கிறது.

கூட்டத்துக்கு அகில இந்திய தலைவர் எஸ்.மீனாட்சிசுந்தரம் தலைமை வகிக்கிறார். தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் டபிள்யூ. சுப்பையன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

**பழச் செடிகளுக்கு சாகுபடி: 65 சதம் மானியம்**

First Published : 06 Jun 2010 09:25:02 AM IST

நாமக்கல், ஜூன் 5: பழச்செடிகளை சாகுபடி செய்து நுண்ணீர்ப் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு 65 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.÷இது தொடர்பாக, புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் சந்திரன் வெளியிட்டுள்ள செய்தி:

÷நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக பெய்துவரும் கோடை மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் பழச்செடி வகைகளை நடவு செய்து பயன்பெறலாம். ÷ஒரு ஹெக்டேர் நிலத்தில் 100 மாங்கன்று, 160 சப்போட்டா, 275 நெல்லி ஆகியவை போதுமனதாகும். ஹைடெக் திட்டத்தின் கீழ் பழச்செடி சாகுபடியை அதிகரிக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளதால் பழச்செடிகளை நடவு செய்து, நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 65 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ÷எனவே, பழச்செடிகள் நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டகலைத் துறையில் முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

**தென்மேற்கு பருவமழை துவக்கம் நிலங்களை பதப்படுத்தும் விவசாயிகள்**

வாலாஜாபாத்: தென்மேற்குப் பருவமழை துவங்கியுள்ளதால் விவசாயிகள் நிலங்களை பதப்படுத்தும் பணியில் ஈடுபடத் துவங்கியுள்ளனர். காஞ்சிபுரம் அடுத்த சிறுவாக்கம், பரந்தூர், புரிசை, புள்ளலூர், தண்டலம், அக்கமாபுரம், வளத்தூர் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது.

தென்மேற்குப் பருவ மழை துவங்கியிருப்பதால் தற்போது சம்பா பட்டத்தில் நெல் மற்றும் மணிலா பயிரிட விவசாயிகள் புழுதி ஓட்டி நிலங்களை பக்குவப்படுத்தி வருகின்றனர். வரதாபுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி மனோகரன் கூறியதாவது: எங்கள் கிராமம் சவுடு மணல் பூமி. தண்ணீர் குறைவான பகுதி என்பதால் முலாம் பழம் அறுவடைக்கு பின் ஒருமாதமாக நிலங்கள் தரிசாக போடப்பட்டுள்ளன. தற்போது தென்மேற்குப் பருவ மழை துவங்கியிருப்பதால் ஆடியில் விதை விதைக்க நிலங்களை புழுதி ஓட்டி பக்குவப் படுத்தி வைக்கிறோம். பருவ மழை தீவிரம் அடைந்தால் சம்பா பட்டத்தில் நெல் விதைக்கலாம். கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டும் பருவ மழை ஏமாற்றம் அளித்தால் மானாவரி பயிர்களான மணிலா ,பயறு வகைகள் விதைக்கலாம்.இவ்வாறு மனோகரன் கூறினார். புரிசை பகுதியைச் சேர்ந்த விவசாயி சரவணன் கூறுகையில், "எங்கள் பகுதியில் தோட்டப் பயிர்களான கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகளும் கனகாம்பரம், மல்லிகை போன்ற பூ வகைகளும் பயிரிடப்படுகிறன. கோடைகாலத்தில் பயிரிட்டால் பயிர்களை காப்பாற்ற முடியாது. தென் மேற்குப் பருவ மழை துவக்கத்திற்கான அறிகுறிகள் தென்படுவதால் தற்போது புழுதி ஓட்டி நிலத்தை பக்குவப்படுத்தி வருகிறோம். ஆனி மாதத்தில் தோட்டப் பயிர்களை பயிரிடுவோம்' என்றார்.

**கொற்கை கால்நடைப்பண்ணையில் தீவனப்புல் அறுவடை பணி தீவிரம்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே கொற்கை கால்நடைப்பண்ணையில் தீவனப்புல் அறுவடை தீவிரமாக நடந்தது. ஒரு கிலோ புல் ஒரு ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அடுத்த கொற்கையில் தமிழக அரசின் கால்நடைப்பண்ணை 495 ஏக்கரில் செயல்படுகிறது. இப்பண்ணையில் உள்ள 280 உம்பளச்சேரி கால்நடைகளுக்கு 270 ஏக்கர் மேய்ச்சல் திடலாக உள்ளது. இதில், 25 ஏக்கரில்

கிளேரியா செடி தீவண புல் வளர்க்கப்படுகிறது. மத்திய அரசின் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 34.50 லட்சம் ரூபாயில் கால்நடை பண்ணையில் டாக்டர் ராமலிங்கம் மேற்பார்வையில் 100 ஏக்கரில் மகாராஷ்டிரா எருமைப்புல் பயிரிடப்பட்டு தற்போது அறுவடை நடந்து வருகிறது. பண்ணையில் உள்ள கால்நடைகளுக்காக அறுவடை செய்யப்படும் தீவணப்புல்லில் எஞ்சியது விவசாயிகளுக்கு மானிய விலையில் ஒரு கிலோ புல் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பண்ணையில் உள்ள உம்பளச்சேரியின கால்நடை கன்றுகள் அரசு நிர்ணயிக்கும் விலைக்கு விரைவில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மண்டல கால்நடை இணை இயக்குனர் குணசேகரன் கூறுகையில், ""கொற்கை கால்நடைப்பண்ணையில் 100 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எருமை புல் தீவணம் அறுவடை தீவிரமாக நடக்கிறது. இதில், எஞ்சிய தீவணப்புல் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் கொற்கை கால்நடைப்பண்ணைக்கு நேரில் வந்து வாங்கிச் செல்லலாம்,'' என்றார்.

**தர்மபுரியில் தென்மேற்கு பருவமழை துவக்கம் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரியில் ஜூன் துவக்கத்தில் இருந்து தென் மேற்கு பருவமழை மாவட்டத்தில் பரவலாக பெய்ய துவங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் காவிரி, சின்னாறு, தென்பெண்ணையாறு ஆகிய ஆற்றை மையமாக கொண்டு நீர் ஆதாரங்கள் மூலம் நீர் தேக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் சுழற்சி முறையில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் 60 சதவீதம் பேர் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கூலி வேலைகளுக்கு சென்று வருகின்றனர். ஆண்டுதோறும் மாவட்டத்தில் முக்கிய நீர் ஆதாரமாக கருத்தப்படும் காவிரி மற்றும் தென்பெண்ணையாற்றில் தென் மேற்கு பருவமழையை மையமாக வைத்து விவசாய மற்றும் குடிநீருக்கான நீர் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரையான தென்மேற்கு பருவமழையே தர்மபுரி மாவட்டத்தில் 70 சதவீத விவசாய நிலங்களும், நீர் ஆதாரங்களும் நம்பியுள்ளது. வடகிழக்கு பருவமழையை விட தென்மேற்கு பருவமழை 50 மி.மீட்டர் அதிகம் இருக்கும். சின்னாறு ஆற்றுப்படுகை பகுதிகள் வடகிழக்கு பருவமழையை மையமாக வைத்து விவசாய பணிகள் நடந்து வருகிறது.

எந்தாண்டும் இல்லாத வகையில் தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு கோடை வெயில் உக்கிரம் பிப்ரவரியில் இருந்து மே வரையில் வாட்டி எடுத்து விட்டது. இதனால், மாவட்டத்தில் விவசாய பயிர்கள் செய்ய முடியாமல் பெரும் அளவில் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டது. குறிப்பாக

இறவை பாசனத்துக்கு அடிப்படையான கிணற்று நீர் மட்டும் பெரும் அளவில் குறைந்ததால், இறவை பாசன விவசாயமும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டதோடு, சின்னாற்று படுகையையொட்டியுள்ள பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஹள்ளி ஆகிய பகுதிகளில் கூட வறட்சிசை தாங்கும் தென்னை மரங்கள் கூட பட்டு போனது. மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் குடிநீர் பிரச்னை தலைவிரித்தாடியது. பாதுகாப்பற்ற குடிநீரை பருகியதால், பென்னாகரம் தாலுகா பகுதியில் நான்கு பேரும் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா பகுதியில் ஒருவரும் உயிர் இழக்கும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், ஜூன் துவக்கத்தில் இருந்து மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ய துவங்கியது. இரு நாட்களாக இரவு நேரங்களில் மாவட்டம் முழுவதும் பெய்த மழை விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் ஆறுதலை கொடுத்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தை பொறுத்த வரையில் விவசாயிகள் மத்தியில் ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில் மழை பெய்தால், அந்தாண்டு நல்ல மழை பெய்து நீர் ஆதார பகுதிகளில் நீர் நிரம்பும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இந்தாண்டு, ஜூன் முதல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியிருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மாவட்டம் முழுவதும் விவசாயிகள் தற்போது பெய்துள்ள மழையால் நிலங்களை உழுது விதைகள் விதைக்க தயார் படுத்தி வருகின்றனர். வைகாசி மாத இறுதியில் சாகுபடி பணிகள் துவங்கினாலும், தொடர் மழை விவசாயத்துக்கு கை கொடுக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

**புகையிலை விலை சரிவால் விவசாயிகள் சோகம் நல்ல விலைக்காக பதப்படுத்தி இருப்பு வைப்பு**

கோபிசெட்டிபாளையம்: சென்றாண்டை விட புகையிலைக்கு தற்போது குறைந்த விலை கிடைப்பதால், விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர். வைகாசி மாத இறுதியில் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் புகையிலை விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட கோபி, டி.என்.பாளையம் மற்றும் நம்பியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் அதிகளவில் புகையிலை பயிரிடுவது வழக்கம். நம்பியூர் பகுதியில் மட்டும் 5,000 ஏக்கரில் புகையிலை பயிராகிறது.

காரத்தன்மை அதிகமுள்ள மண்வளம் மிகுந்த கோபி, நம்பியூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விளையும் புகையிலைக்கு மார்க்கெட்டில் நல்ல கிராக்கி உண்டு. கோபி பகுதியில் விளையும் புகையிலையை கொண்டு "வாயில் மென்னும் தூள்' அதிகளவில் தயாரிக்கப்படுகிறது.சென்றாண்டு துவக்கத்தில் விவசாயிகளுக்கு ஒரு கிலோ புகையிலைக்கு 50

ரூபாய் வரை கிடைத்தது. தொடர்ந்து விலை ஏறுமுகத்தில் இருக்கும் என்ற நம்பிக்கையில் நடப்பாண்டு கோபி சுற்று வட்டார பகுதிகளில் அதிகளவில் விவசாயிகள் புகையிலை பயிரிட்டனர். கடந்த மாதம் புகையிலை அறுவடை துவங்கியதும், விவசாயிகள் எதிர்பார்ப்புக்கு மாறாக விலை படிப்படியாக குறையத் துவங்கியது. சென்றாண்டு 50 முதல் 60 ரூபாய் வரை விற்ற புகையிலைக்கு, தற்போது 30 முதல் 40 ரூபாய் வரைதான் கிடைக்கிறது.

விலை உயரும் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்த புகையிலையை விற்பனை செய்யாமல் விவசாயிகள் பதப்படுத்தி வைத்துள்ளனர். ஆனால் "நடப்பாண்டு தென் மாவட்டங்களில் புகையிலை உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலை உயர வாய்ப்பில்லை' என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

**மஞ்சள் விலை வீழ்ச்சியால் வரத்து அடியோடு சரிவு**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைவதால் மஞ்சள் வரத்து குறைந்துள்ளது. மஞ்சள் ஒரு குவிண்டால் 15 ஆயிரத்து 600 க்கு விற்கப்பட்டபோது மார்க்கெட்டுக்கு 8,000 மூட்டைகள் வரை வரத்தானது. தற்போது 3,000 மூட்டைகள் மட்டுமே வரத்தாகிறது. சென்றாண்டில் மஞ்சள் விலை குவிண்டால் ஒன்று 13 ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்கப்பட்டதே ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் அதிகபட்ச விலையாக இருந்தது. நடப்பாண்டு ஜனவரி இறுதியில் இருந்து மஞ்சள் சீஸன் துவங்கியது. அப்போது மஞ்சள் குவிண்டால் 9,900 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மஞ்சள் விலை 3,700 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது. இவ்விலை மூன்று மாதங்களாக நீடித்தது. மார்ச் துவக்கத்தில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 2,400 ரூபாய் திடீரென அதிகரித்து 13 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்கப்பட்டது. இருப்பினும் மஞ்சள் தேவை அதிகரிப்பு காரணமாக மார்ச் இறுதியில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரை மேலும் அதிகரித்து 13 ஆயிரத்து 917 ரூபாயாக உயர்ந்தது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மஞ்சள், தமிழகத்தில் பிற பகுதியில் அறுவடை செய்யப்படும் மஞ்சள் ஈரோடு மார்க்கெட்டுக்கு அதிகளவில் கொண்டு வரப்பட்டது. ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கோபி சொசைட்டி, ஈரோடு சொசைட்டி, வெளி மார்க்கெட்டில் விவசாயிகள் வரவு அதிகரித்ததால், மஞ்சள் வரத்தும் அதிகமானது. சென்ற இரு மாதங்களாக நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் தினமும் 8,000 மூட்டைகள் வரை வரத்தானது.
வரத்து அதிகரித்தபோதிலும் சென்ற மாதத்தில் மஞ்சள் விலை உயர்ந்தது. விரலி 15 ஆயிரத்து 766

ரூபாய்க்கும், கிழங்கு 15 ஆயிரத்து 586 ரூபாய்க்கும் விற்பனையானது. இவ்விலை சென்ற சில வாரங்களாக நீடித்தன. சென்ற வார இறுதியிலும் 15 ஆயிரத்து 297 வரை விற்பனையானது.

விடுமுறைக்கு பின் நேற்று மீண்டும் மஞ்சள் மார்க்கெட் துவங்கியது. நேற்றைய மார்க்கெட்டில் மஞ்சள் விலை மூட்டைக்கு 500 ரூபாய் வீழ்ச்சி அடைந்தது. விரலி 14 ஆயிரத்து 611, கிழங்கு 14 ஆயிரத்து 610க்கு விற்கப்பட்டது. திடீரென மஞ்சள் விலை சரிவடைந்ததால், விவசாயிகள் தாங்கள் கொண்டு வந்த மஞ்சளை இருப்பு வைத்து விட்டனர். மார்க்கெட்டுக்கு மஞ்சள் மூட்டைகள் குறைந்தளவே வந்தன. நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் 2,500 முதல் 3,000 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. வியாபாரிகள் கூறுகையில், ""மஞ்சள் தேவையின் போது வடமாநில வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். நடப்பு வாரத்தில் வடமாநில வியாபாரிகள் வரத்து குறைவாக உள்ளதால் மஞ்சள் விலை திடீரென குறைந்துள்ளது. வடமாநில வியாபாரிகள் வரத்து அதிகரிக்கும் போது மீண்டும் விலை அதிகரிக்கும்,' என்றனர்.

**கோழிப்பண்ணையால் குமிளம்பரப்பில் ஈ தொல்லை**

ஈரோடு: ஈக்கள் தொல்லைக்கு காரணமான கோழிப் பண்ணையை அகற்றக் கோரி குமிளம்பரப்பு மக்கள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். சித்தோடு அருகே குமிளம்பரப்பு பாரதி நகர், பெருமாள் நகர் பகுதி மக்கள் கூறியதாவது: பாரதி நகர், பெருமாள் நகர் பகுதியில் 500 குடும்பங்கள் உள்ளன. இதன் அருகில் கோழிப்பண்ணை உள்ளது. கோழிப்பண்ணை நிறுவனத்தில் பச்சை கருவாடு, எலும்புத்தூள் முதலானவற்றை அரைத்து கோழித்தீவனம் தயார் செய்வதாலும், இறந்த கோழிகளை குவியல் குவியலாக இரவு நேரத்தில் எரிப்பதாலும் துர்நாற்றம் வீசுகிறது. ஈக்கள் அதிகமாக உற்பத்தியாகி வீடுகளில் புகுந்து பெருமளவில் தொந்தரவு தருகிறது. இது தொடர்பாக பல ஆண்டுகளாக கலெக்டரிடம் மனு கொடுத்து வருகிறோம். அந்த சமயத்தில் மட்டும் மருந்து அடித்து ஈக்களை கட்டுப்படுத்துகின்றனர். தொடர்ந்து இதை சயல்படுத்துவதில்லை. ஈக்களின் தொந்தரவால் குடிநீர் மற்றும் உணவு பொருட்கள் பாதிக்கப்பட்டு காலரா மற்றும் வயிற்று போக்கு போன்ற வியாதிகள் ஏற்படுகிறது. சிறு குழந்தைகள் அருந்தும் பால் முதற்கொண்டு அனைத்திலும் ஈக்கள் விழுந்து நோய்கள் பரவுகிறது. நேரில் ஆய்வு செய்ய அதிகாரிகள் வருவதில்லை. எனவே, இந்த இடத்தில் உள்ள கோழிப்பண்ணையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். அப்போதுதான் இங்கு குடியிருக்கும் மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

4.தக்காளி விலை ரூ. 38 பொதுமக்கள் அதிர்ச்சி

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி 38 ரூபாய்க்கு விற்கப்படுவதால் பொது மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் பரவலாக தக்காளி, வெண்டை, புடலை, அவரை உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் ஈரோடு மாவட்டத்தில் கணிசமாக மழை பெய்தபோதிலும், மே மாத அக்னி வெயிலால் ஈரோடு மாவட்டத்தில் விளை நிலங்கள் வறண்டன. தமிழக அளவில் போதிய மழை பெய்யாததாலும், தற்போதைய அக்னி வெயிலாலும் விளை நிலங்கள் வறண்டன. காய்கறி உற்பத்தி பெருமளவு குறைந்தது. குறிப்பாக தக்காளி விளைச்சல் மிகவும் குறைந்து விட்டது. சென்ற மாத துவக்கத்தில் ஒரு கிலோ தக்காளி விலை ஏழு ரூபாய்க்கு விற்கப்பட்டது. தக்காளி வரத்து படிப்படியாக குறைந்ததால் விலை அதிகரிக்க துவங்கியது.

சென்ற வாரத்தில் கிலோ 25 முதல் 28 ரூபாய் வரை விற்கப்பட்டது. சென்ற சில நாட்களாக லேசான மழை பெய்வதால் பூமி வெப்பம் அதிகளவில் வெளிப்படுகிறது. தக்காளி பூ கருகி கீழே விழுந்து விடுவதால் விளைச்சல் குறைந்து விட்டது. ஈரோடு மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து மிகவும் குறைந்து விட்டது. 28 ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி 38 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தக்காளி உயர்வு காரணமாக தக்காளி பயன்பாடு குறைந்து விட்டது. உழவர் சந்தையில் விவசாயிகள் நேரடியாக தக்காளி விற்பனை செய்வதால் தக்காளி விலை குறைந்து காணப்படுகிறது. உழவர் சந்தையில் பெங்களூரு, கிராஸ் ஆகிய ரகம் 26 ரூபாய் முதல் 28 ரூபாய, நாட்டு தக்காளி 29 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. நேதாஜி மார்க்கெட், தள்ளு வண்டி பகுதியில் ஒரு கிலோ தக்காளி 38 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

வியாபாரி ஒருவர் கூறியதாவது: வெளியூர் மற்றும் உள்ளூரில் இருந்து வரும் தக்காளி வரத்து குறைந்துவிட்டது. தற்போது வரும் தக்காளி நன்றாகவும் இல்லை. வெயிலில் வாடிய தக்காளி பழங்களே அதிகம் வருகிறது. தக்காளி வரத்து தொடர்ந்து குறைந்ததால் 28 ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி 38 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தக்காளி வரத்து தொடர்ந்து குறைந்து கொண்டே செல்வதால் மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.
இவ்வாறு அவர் கூறினார். நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி, முட்டை கோஸ் கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய், நூர்கோல் 25, பீட்ரூட் 20, உருளைக்கிழங்கு 15, முள்ளங்கி 20, பீன்ஸ் 40, பழைய

இஞ்சி 70, புதிய இஞ்சி40, கத்திரிக்காய் 16, புடலை 18, சேனைக்கிழங்கு 30, சுரைக்காய் ஒன்று 5, கேரட் 30 ரூபாய் விற்கப்படுகிறது.

**மரக்கன்று நடும் விழா**

நாமக்கல்: உலக சுற்றுச்சுழல் தினத்தை முன்னிட்டு, நாமக்கல் எம்.பி., தொகுதி இளைஞர் காங்கிரஸ் சார்பில் ப.வேலூர் யூனியனுக்கு உட்பட்ட சுங்காரம்பட்டி கிராமத்தில் மரம் நடும் விழா நடந்தது. எம்.பி., தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கதிரவன் தலைமை வகித்தார். ப.வேலூர் எம்.எல்.ஏ., தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் சந்திரன் முன்னிலை வகித்தார். சுக்காரம்பட்டி கிராமத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பரமசிவம், வேலூர் நகர காங்கிரஸ் தலைவர் பெரியசாமி, இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் அருண், சுவாமி சந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

பேரூர் : ""சுற்றுப்புறச் சுகாதாரமும், நோய் எதிர்க்கும் தன்மையும், கறவைப்பசுக்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியம்,'' என, கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்ட துணை இயக்குனர் பேசினார்.
மாதம்பட்டி அருகே குப்பனூரில் கறவை பசுக்களின் ஈனுகால பராமரிப்பு மற்றும் கன்று ஈன இயலாமை குறித்த செயல்முறை விளக்கப்பயிற்சி நடந்தது. ஊராட்சி தலைவர் நிர்மலா தலைமை வகிக்க, குப்பனூர் சின்னராஜ் முன்னிலை வகித்தார். இதில், கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்ட துணை இயக்குனர் ஜெகதீசன் பேசியதாவது: கன்று ஈனும் முன் உள்ள சினைகாலம், ஈன்ற பின் ஆரம்ப கறவை காலம் இரண்டும் சேர்த்து ஈனுகாலம்.ஈனுகால பராமரிப்பு முறைகள் நல்ல வகையில் இருந்தால், எதிர்வரும் நாட்களில் கருத்தரிப்பு தன்மை, பால் உற்பத்தி திறன் அதிக அளவில் இருக்கும். சத்துமிக்க தீவனம், சுத்தமான குடிநீர், நடக்கவைத்தல் போன்றவற்றை ஈனுகாலத்தில் வழங்கும்போது கறவைமாடுகளுக்கு நோய் எதிர்ப்புத் தன்மை கிடைக்கும்; முழு உற்பத்தியை நமக்கு அளிக்கும். ஒரு கறவை மாடு கன்று ஈன்று, முதல் 305 நாளில் 3000 லிட்டருக்கு குறைவில்லாத பால் மற்றும், 365 நாளில் அடுத்த கன்று இவ்விரண்டையும் நமக்கு வழங்கும். பசுந்தீவனம், உலர்ந்த தீவனம், அடர் தீவனம் மூன்றையும் சமபங்காக அளித்து கறவை மாட்டின் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய வேண்டும். மாட்டின் ஆரம்ப காலத்தில் நோய் பாதிப்பு ஏற்படாதிருந்தால் மட்டுமே, பசுவின் முழு உற்பத்தியையும்

விவசாயிகள் பெற முடியும். மேலும் பால்மடிநோய், கருப்பை நோய் போன்ற கிருமிகளால் ஏற்படும் நோய்கள் கறவைகளை பாதிக்காதிருக்க, சுற்றுப்புறச்சுகாதாரம் மற்றும் நோய் எதிர்க்கும் தன்மை கொண்ட ஆரோக்கியம், கறவை பசுக்களுக்கு மிகவும் அவசியம். இவ்வாறு, துணை இயக்குனர் பேசினார்.

இதில், குப்பனூர் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 73 கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை, தொண்டாமுத்தூர் கால்நடை மருத்துவர் சிவகுமார் செய்திருந்தார்.

**பெரியகுளத்தில் மாவடு விளைச்சல் பாதிப்பு**

பெரியகுளம்: பெரியகுளம் பகுதியில் மாவடுகாய் விளைச்சல் வீழ்ச்சியடைந்து உள்ளது. பெரியகுளம் வனப்பகுதிகளில் "மாவடுகாய்' மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கிடைக்கும். சில பகுதிகளில் மே, ஜூன் மாதங்களிலும் கிடைத்து வந்தது. வனப்பகுதிகளில் எவ்வித பராமரிப்பின்றி உயரமான மா மரத்திலிருந்து விளைவது மாவடுகாய். இந்த மாவடுகாய் சிறிய அளவிலே இருக் கும். அதன் காம்பிலும் சுவை தன்மை உண்டு. கடந்த ஆண்டு பெரியகுளம் பகுதியிலிருந்து, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, துபாய் உட் பட வெளிநாடுக ளுக்கும், பாண்டிச்சேரி, கேரளா, ஆந்திரா, பீகார் உட்பட வெளிமாநிலங்களுக்கும், சென்னை, மதுரை, ராமநாதபுரம் உட்பட வெளிமாவட்டங்களுக்கும் பெரியகுளம் பகுதியிலிருந்து மாவடுகாய் அனுப்பப்பட் டது. இதனை ஊறுகாய்தயாரிக்க பயன்படுத்தி வருகின்றனர். பக்குவமாக வைத்துக் கொண்டால் மூன்று ஆண்டுகள் வரை கெடாமல் இருக்கும். பெரியகுளத்தில் நடப்பாண்டு மாங்காய் பத்து சதவீதம் மட்டுமே விளைந்தது. அதேபோல் மாவடுகாய் விளைச்சலும் குறைந் தளவே இருந்தது. மாவடுகாய் வியாபாரி நாகப்பன் கூறுகையில், பல ஆயிரம் ரூபாய் பணம் முதலீடு செய்து வனப்பகுதிகளில் குத்தகைக்கு எடுத்தோம். இந்தாண்டு விளைச்சல் இல்லாததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

பருவமழையால்... அழகை இழக்கும் ரோஜாக்கள்! தோட்டக்கலைத் துறையினர் நடவடிக்கை



ஊட்டி:பருவமழையால், ஊட்டி ரோஜா பூங்காவில் உள்ள பல ரக மலர்கள் மண்ணுக்கு உரமாகின்றன; இருப்பினும், வார இறுதி நாட்களில், பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.ஊட்டி தாவரவியல் பூங்காவின் நூற்றாண்டு நினைவாக, "96ம் ஆண்டில், விஜயநகரம் பகுதியில் ரோஜா பூங்கா உருவாக்கப்பட்டது; இதற்கு நூற்றாண்டு ரோஜா பூங்கா என பெயரிடப்பட்டது. தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் உருவாக்கப்பட்ட பூங்காவில், தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலர் செடிகளில், 4,000 ரக ரோஜாக்கள் உள்ளன; 2006ம் ஆண்டு ஜப்பானில் நடத்தப்பட்ட சர்வதேச ரோஜா கருத்தரங்கில், "கார்டன் ஆப் தி ஒக்ஸ்சலன்ஸ்' விருது வழங்கப்பட்டது.விருதை தக்க வைத்துக் கொள்ளும் வகையில், ஆண்டுதோறும் இப்பூங்கா மென்மேலும், பொலிவாகி வருகிறது. கோடை சீசனில், கோடைவிழாவின் முதல் நிகழ்ச்சியாக, 8, 9ம் தேதிகளில் ரோஜா கண்காட்சி நடத்தப்பட்டது;

பூங்காவில் உள்ள ரோஜாக்களை தவிர, பெங்களூரு, ஓசூர், வட மாநிலப் பகுதிகளில் இருந்தும் திரளான ஏற்றுமதி ரோஜாக்கள் காட்சிபடுத்தப்பட்டன. 20 ஆயிரம் மலர்களால் உருவாக்கப்பட்ட யானை, கலங்கரை விளக்கு, ஒகேனக்கல் நீர் விழ்ச்சி, பார்வையாளர்களை கவர்ந்தன.அரிய வகை ரோஜாக்களாக கருதப்படும் பச்சை, நீலம், கருப்பு ரோஜாக்களை தேடி, திரளான பார்வையாளர்கள் பூங்காவை வட்டமடித்தனர்; இரு நாட்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர். கோடை சீசன் முடிந்த பின்னும், வார இறுதி நாட்களில், கேரள மற்றும் கர்னாடக மாநிலங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; தவிர, உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க உள்ள தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் என பலதரப்பட்ட மக்கள் இங்கு வருவர் என எதிர்பார்க்கப்படுவதால், பூங்காவை மேலும் பொலிவுபடுத்த, நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.
இது ஒருபுறம் இருக்க, சில நாட்களாக ஊட்டியில் கனமழை பெய்து வருவதால், பூங்காவில் மலர்ந்துள்ள பல மலர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன; ரோஜாக்களை பாதுகாக்கும்

நடவடிக்கையை, தோட்டக்கலைத் துறையினர் மேற்கொண்டுள்ளனர். இருப்பினும், பூங்காவின் கீழ் தளத்தில் உள்ள மலர்கள் பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

ஜனாதிபதி வருகைக்கு ஏற்பாடு

கோவையில் நடத்தப்படும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க, ஜனாதிபதி பிரதீபா பாடீல், வரும் 19ம் தேதி ஊட்டி வருகிறார்; இதற்கான பூர்வாங்க மற்றும் பாதுகாப்பு பணிகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா ஸ்தலங்களுக்கு அவர் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுவதால், தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா பொலிவுபடுத்தப்பட்டு வருகிறது. செம்மொழி மாநாட்டுக்கு உரித்தான திருவள்ளுவர் சிலை, லில்லியம் மலர்கள், தாவரவியல் பூங்காவில் காட்சிபடுத்தப்பட்டுள்ளன. ரோஜா பூங்காவில் பல புதுமைகளை புகுத்த நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

**ஏல மையத்தில் தொடரும் விலை சரிவு தேயிலை விவசாயிகள் கவலை**

ன்னூர்:குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தொடரும் விலை சரிவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 22க்கான ஏலம் நடத்தப்பட்டது. மொத்தம் 13.09 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக இருந்தது; இலை ரகம் 8.65 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.48 லட்சம் கிலோ அடங்கும். உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்தவரை, வழக்கமாக பங்கேற்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப் மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரமும் குறைவாகவே இருந்தது.ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள், ஓரளவு தேயிலைத் தூளை வாங்கினர். உள்நாட்டு வர்த்தகம் கை கொடுக்காததால், விற்பனைக்கு வந்த தேயிலைத் தூளில் 30 சதவீதம் தேங்கியது.

சி.டி.சி., ரகத்தில், கோத்தகிரி ஸ்ரீலட்சுமி தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 152 ரூபாய் விலை கிடைத்தது; 70க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில், கர்சன் தேயிலைத் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 166 ரூபாய் விலை கிடைத்தது; 20க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.விலை நிலவரத்தை பொறுத்தவரை, இலை ரகத்தில், சாதாரண ரக தூளின் விலை 43-46, சிறந்த ரக தூளின் விலை 80 - 118 ரூபாயாக இருந்தது; டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக தூளின் விலை 40 - 60, சிறந்த ரக தூளின் விலை 90- 130 ரூபாயாக இருந்தது.

விற்பனை எண் 23க்கான ஏலம், வரும் 10,11ம் தேதிகளில் நடத்தப்படுகிறது; மொத்தம் 15.92 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இலை ரகம் 10.63 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.30 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 1.33 லட்சம் கிலோ குறைவு. ஏலத்தில் விற்கப்படும் தேயிலைத் தூளின் குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் தான் விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு வார விலை வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் இந்த

வாரம் விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு 5.50 - 6.50 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**சுற்றுச்சூழல் தின கருத்தரங்கு**

கோத்தகிரி:கோத்தகிரி பாண்டியராஜ் நினைவு மெட்ரிக்., மேல்நிலைப் பள்ளியில், சர்வதேச சுற்றுச்சூழல் தின கருத்தரங்கு நடத்தப்பட்டது.பள்ளியின் 8ம் வகுப்பு மாணவி லீனாகிரேஸ், சுற்றுச்சூழல் மாசுக்கான காரணங்கள், பாதுகாக்கும் முறை, விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து பேசினார். சுற்றுச்சூழல் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசு வழங்கப்பட்டன.

தலைமை ஆசிரியை பிரியதர்ஷினி தலைமை வகித்தார். ஆசிரியர்கள் ராஜு, பிரபு உட்பட ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் பங்கேற்றனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் சந்தோஷ்குமார் நன்றி கூறினார்.

* ஊட்டி அருகேயுள்ள காட்டேரி டேம் என்.எஸ். ஐயா மேல்நிலைப் பள்ளியில், சுற்றுச்சூழல் தின பேரணி நடத்தப்பட்டது. தலைமை ஆசிரியர் லிங்கராஜ் (பொ) துவக்கி வைத்தார். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேனர்களை மாணவர் ஏந்திச் சென்றனர். ஏற்பாடுகளை, என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

**இணை இயக்குனருக்கு கண்டனம் மலர் சாகுபடி விவசாயிகள் "கடுப்பு'**

ஊட்டி:நீலகிரி தோட்டக்கலைத் துறை இணை இயக்குனரை மாற்றக்கோரி, மலர் சாகுபடி சிறு விவசாயிகள், தோட்டக்கலைத் துறை மலர் ஏல மையத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.நீலகிரி தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் இஸ்ரவேலை கண்டித்து, நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கத்தினர், ஊட்டி சேரிங்கிராசில் உள்ள தோட்டக்கலைத் துறை மலர் ஏல மையத்தை நேற்று முற்றுகையிட்டனர். தோட்டக்கலைத் துறை இணை இயக்குனருக்கு எதிராக கோஷம் எழுப்பினர்; பின், ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் சென்று மனு அளித்தனர். மனுவில் கூறியுள்ளதாவது:

ஐந்து ஆண்டுகளுக்கு முன் தேயிலை மற்றும் காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வந்தோம். தேயிலை விலை வீழ்ச்சியால், விவசாயிகளின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது; மாற்று பயிர் திட்டத்தின் கீழ் மலர் சாகுபடி செய்ய தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியது. வங்கியில் கடன் பெற்று மலர் சாகுபடி செய்தோம்.

முதல் ஓராண்டுக்கு கட்டுபடியாகும் நிலை இருந்தது; பின், மலர்களுக்கு போதிய விலை கிடைக்காதது, இடு பொருட்கள் மற்றும் கூலி உயர்வு, இயற்கை சீற்றங்கள், பசுமைக் குடில்கள் சேதமடைவது உட்பட காரணங்களால், இத்தொழில் நலிவடைந்தது. இதனால், வங்கிக் கடன்களை செலுத்த முடியவில்லை.

எனவே, மத்திய, மாநில அரசுகளை அணுகி எங்கள் வங்கி கடன்களை தள்ளுபடி செய்ய போராடி

வருகிறோம். இந்நிலையில், மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் இஸ்ரவேல், மலர் சாகுபடி விவசாயிகளின் நிலை அறியாமல் மலர் ஒன்றுக்கு 7 ரூபாய் விலை கிடைக்கிறது; விவசாயிகள் வங்கிக் கடனை செலுத்துவதில்லை என கூறியுள்ளார். மலர் சாகுபடி குறித்து தெரியாத இணை இயக்குனர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூங்கில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து பாதிப்பு**

பந்தலூர்:பந்தலூர் அடுத்துள்ள பாட்டவயல்-வெள்ளேரி, பாட்டவயல்-சுல்தான் பத்தேரி சாலைகளில் மூங்கில் மரங்கள் சாய்ந்ததால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.பந்தலூர்-பாட்டவயல்-சுல்தான் பத்தேரி, பாட்டவயல்-அம்பலமூலா சாலையோரங்களில், மூங்கில் மரங்கள் காய்ந்துள்ளன. சாலையோரங்களில் உள்ள மூங்கில்கள் வெட்டி அகற்றாத நிலையில், சிறு மழை பெய்தாலும், சாலையின் குறுக்கே சாய்ந்து போக்குவரத்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. இரு நாட்களுக்கு முன் மாலை, பந்தலூர் பகுதியில் பெய்த மழையால், பாட்டவயல்-வெள்ளேரி, பாட்டவயல்-சுல்தான்பத்தேரி சாலையில், 10க்கும் மேற்பட்ட இடங்களில் மூங்கில் மரங்கள் சாய்ந்தன. நெடுஞ்சாலைத் துறை சாலை ஆய்வாளர் வர்கீஸ் தலைமையில் சாலைப் பணியாளர்கள் மரத்தை அகற்றினர்; இதனால், இரு வழித்தடங்களில் 6.00 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எனவே, சாலையோரங்களில் இருக்கும் மூங்கில் மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**துவரம்பருப்பு விலை உயர்வை தடுக்க துவரை விளைச்சலுக்கு இலவச திட்டம்**

குஜிலியம்பாறை: துவரம் பருப்பு விலை அதிகரித்து வருவதை தடுக்கும் விதமாக, துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை, அடிஉரம், மருந்து உள்ளிட்ட இடுபொருட்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட உணவுப்பொருட்களின் விலை, சமீப காலமாக அதிகரித்து வருகிறது. ரேஷனில் அரிசி கிலோ ஒரு ரூபாய்க்கு கிடைத்தாலும், துவரம்பருப்பு வெளி மார்க்கெட் டில் கிலோ 90 ரூபாய் என்ற அளவில் உயர்ந்து, தற்போது கிலோ 70 ரூபாய்க்கு விற்கிறது. நிலைமையை சமாளிக்க அரசு வெளிநாட்டில் இருந்து துவரம் பருப்பு இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. இந்நிலையில், உள் நாட்டிலேயே துவரை உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், "துவரையை சிறப்பினமாக கருதி' புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள் ளது. துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேர் நிலத்திற் கான விதை, அடி உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட இடுபொருட்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ளது. குஜிலியம்பாறை ஒன்றிய அளவில் 12 திடல்கள் அமைக்கப்பட உள்ளதால், துவரை சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் அந்தந்த

வட்டார வேளாண் மையங்களில், பாசன ஆதாரங்கள், வருவாய்துறை (சிட்டா, அடங்கள்) நகல்களுடன் பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளதால், இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுமாறு, திண்டுக்கல் வேளாண் இணை இயக்குநர் தெய் வேந்திரன், வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**வேம்பரளி வன ஆராய்ச்சி மையம் மேம்படுத்தப்படுமா ?**

மதுரை: மதுரை அருகே புதுநத்தம் ரோடு வேம்பரளி வேளாண் வனவியல் ஆராய்ச்சி மையத்தில் போதிய பணியாளர்கள், தண்ணீர் வசதி இல்லாததால் மரக்கன்றுகள் கருகி வருகின்றன. வனவிலங்குகள் உள்ளே புகுந்து சேதம் விளைவிக்கின்றன. தமிழக வனத்துறையின் வேளாண் வனவியல் ஆராய்ச்சி மைய திருச்சி கோட்டம் 2006 ல் பிரிக்கப்பட்டு, மதுரையில் துவக்கப்பட்டது. நமது தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற உயர் ரக மரக்கன்றுகளை வளர்த்தல், அவற்றை விவசாய நிலங்களில் நடுதல், புதிய தொழில் நுட்பங்களை புகுத்துதல் இதன் பணியாகும்.

மதுரை அருகே வேம்பரளியில் 25 ஏக்கரில் வேளாண் வனவியல் ஆராய்ச்சி மையம் உள்ளது.மதுரை கோட்டத்தின் கீழ் தேனி, சிவகங்கை, ராமேஸ்வரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரியில் ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. வேம்பரளியில் முள்ளில்லாத மூங்கில்,விதையில்லா சவுக்கு, கடம்பமரம் உட்பட பல்வேறு மரங்கள் சோதனை முறையில் வளர்க்கப்படுகின்றன. மூங்கில்கள் அமராவதி, திரிபுரா, சவுக்குகள் சேலம் வறட்டுப்பள்ளம், ராமேஸ்வரத்திலிருந்து கன்றுகள் கொண்டுவரப்பட்டவை. மதுரையில் புராண காலத்தில் கடம்ப மரங்கள் நிறைந்திருந்ததால் "கடம்பவனம்' என அழைக்கப்பட்டது. தற்போது அழகர்கோவில் மலைப்பகுதியில் மட்டும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் அம்மரங்கள் எஞ்சியுள்ளன. இதை கருத்தில் கொண்டு புதுச்சேரி ஆரோவில் உள்ள கடம்ப மரங்களின் விதைகள் ஓராண்டிற்கு முன் வேம்பரளிக்கு கொண்டுவரப்பட்டன. தற்போது அவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.இம்மையத்திற்கு ஆண்டிற்கு 25 லட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. வனத்துறையின் பெரும் முயற்சி ஒருபுறம் இருந்தாலும், பணியாளர்கள் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது.மலைப்பகுதியில் கால்நடைகள் மேய்வதால், உணவு தட்டுப்பாடு ஏற்பட்டு காட்டு மாடுகள் வனவியல் ஆராய்ச்சி மையத்திற்குள் புகுந்து விடுகின்றன. பாதுகாப்பு வேலி, தண்ணீர் தொட்டி, சவுக்குமரங்களை சேதப்படுத்துகின்றன. ஆராய்ச்சி மைய கிணற்றில் போதிய தண்ணீர் இல்லை. இதனால் மூங்கில், சவுக்கு மரங்கள் கருகிவருகின்றன. மேலும், போதிய பணியாளர்கள் இல்லாததால் களைச்செடிகள் அகற்றப்படவில்லை. மேலும், தேசிய ஊரக 100 நாள் வேலைத்திட்ட பணிக்கு விவசாயிகள் சென்றுவிடுவதால், தோட்ட வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. கிணற்றை தூர்வார வேண்டும். அல்லது போர்வெல் அமைக்க வேண்டும்.

சேதமடைந்துள்ள பசுமைக்குடிலை சீரமைக்க வேண்டும். தோட்டக் காவலர்கள் மற்றும் போதிய பணியாளர்களை நியமித்து, நிதி ஒதுக்க வேண்டும். மலைகளில் கால்நடைகளின் மேய்ச்சலை கட்டுப்படுத்தினால் மட்டுமே இம்மையத்தை காப்பாற்ற முடியும்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

நரிக்குடி: உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு திருச்சுழி ஸ்டேட் வங்கி வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. ஊராட்சி ஒன்றிய தலைவர் பொன்னுத்தம்பி, மாவட்ட கவுன்சிலர் போஸ் மரக்கன்றுகளை நட்டனர். வங்கி மேலாளர் அனந்தசயனன், ஊராட்சி தலைவர் பாஸ்கரன், வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரித்தல் பற்றிய பயிற்சி**

வல்லநாடு : உலக பாங்க் நிதி உதவியுடன் செயல்படும் நீர்வள நிலவளத்திட்டம் - நிசபநதி சார்பாக சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரித்தல் பற்றிய ஒரு நாள் பயிற்சி கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது.பயிற்சி கருத்தரங்கை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொறுப்பு) செல்வி துவக்கி வைத்து பேசினார். பேராசிரியர் சுந்தர்சிங் ராஜபாண்டியன், பயிர்கள் உற்பத்தியில் மண் புழு உரத்தின் முக்கியத்துவம், மண்புழு உரத்தினை பயிர்களுக்கு இட வேண்டிய அளவு மற்றும் எப்படி இட வேண்டும் என்பதனை பற்றி பேசினார்.

வேளாண் இணை இயக்குநர் தூத்துக்குடி லூயிஸ் ராஜரத்தினம் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் இன்றைய வேளாண்மையில் மண்புழுக்களின் பங்கு பற்றி பேசினார். உதவிப் பேராசிரியர் ரமேஷ், மண்புழு வகைகள் மற்றும் மண்புழு தயாரிக்க பயன்படும் மூலப்பொருட்கள் பற்றி பேசினார். மேலும் மண்புழு வகைகளில் சிறந்தது எபிஜியிக் வகை புழுக்கள் என்றும், இவ்வகை புழுக்கள் சிவப்பு வண்ணம் உடையவை இதன் மூலம் அதிக அளவு மண்புழு உரம் தயாரிக்க இயலும் என்றும் கூறினார்.உதவிப் பேராசிரியர் ஜெபிரிலின் பிரவினா, சில்பாலின் பைகளில் மண்புழு உரம் எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி பேசினார். மேலும் கூறுகையில் சிமெண்ட் தொட்டிகளில் மண்புழு உரம் தயாரிப்பதற்குப் பதிலாக எளிதாக தூக்கிச் செல்லக்கூடிய சில்பாலின் பைகளில் மண்புழு வளர்ப்பதன் மகத்துவத்தை எடுத்துகூறினார். உதவிப் பேராசிரியர் ஜோசப், சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரிப்பது பற்றி செயல் முறை விளக்கமாக செய்து காட்டினார். இக்கருத்தரங்கில் வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை உதவி இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் வேளாண் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் செல்வராணி மற்றும் பாண்டிச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

---

**மக்காச்சோளம் விலை எகிறியது**

பல்லடம் கர்நாடகாவில் இருந்து மக்காச்சோளம் வரத்து குறைவு எதிரொலியாக, உள்ளூர் மக்காச்சோளம் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 100 ரூபாய் உயர்ந்தது.பல்லடம் பகுதிகளில் 5,000க்கும் மேற் பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகளில், தினமும் ஆறு லட்சம் கோழிகள் வரை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளாவுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.கறிக்கோழிகளுக்கு உணவாக உட் கொள்ள வழங்கப்படும் தீவனம் தயாரிக்க முக்கிய மூலப்பொருளாக சத்து நிறைந்த மக்காச்சோளம் உள்ளது. கோழித்தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளம் பங்கு 50 முதல் 60 சதவீதம்.பல்லடம் பகுதியில் உள்ள கறிக் கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க, மக்காச் சோளம் பல்லடம் சுற்றுவட்டாரங்களில் பண்ணையாளர்கள், தீவன உற்பத்தியாளர் களால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுதவிர, கர்நாடக மாநிலத்தில் இருந்தும் மக்காச்சோளம் கொள்முதல் செய்யப் படுகிறது.

கர்நாடகத்தில் இருந்து பல்லடம் பகுதிக்கு வரும் மக்காச்சோளம் வரத்து, கடந்த ஒருமாதமாக மிகவும் குறைவாக உள்ளது. இதன்காரணமாக, கடந்த மாதம் துவக்கத்தில் 950 ரூபாயாக இருந்த ஒரு குவிண்டால் உள்ளூர் மக்காச்சோளம், தற்போது குவிண்டாலுக்கு 100 ரூபாய் உயர்ந்துள்ளது. ஒரே மாதத்தில் குவிண்டாலுக்கு 100 ரூபாய் விலை உயர்வு காரணமாக, பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் மக்காச் சோளம் இருப்பு வைத்திருந்த விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் கறிக்கோழி தீவன தயாரிப்பாளர்களிடம் விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***கையிருப்பு அதிகமாக உள்ளதால் கோதுமை இறக்குமதி மீது தீர்வை விதிக்க பரிசீலனை***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*சென்ற நிதி ஆண்டில், உள்நாட்டில் கோதுமை உற்பத்தி மிகவும் அதிகரித்திருந்தது. இந்த நிலையில், இந்திய உணவு கழகத்திடம் அதிக அளவில் கோதுமை கையிருப்பில் உள்ளது. இதுபோன்ற காரணங்களால், மத்திய அரசு கோதுமை இறக்குமதி மீது தீர்வை விதிக்க பரிசீலனை செய்து வருவதாக மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*
*தற்போது, இந்திய உணவு கழகத்திடம் 3.50 கோடி டன் அளவிற்கு கோதுமை*

கையிருப்பில் உள்ளது. இதில், சென்ற மாதம் வரையிலுமாக கொள்முதல் செய்யப்பட்ட 2.20 கோடி டன் கோதுமையும் அடங்கும்.

கொள்முதல்

பொதுவாக, மத்திய அரசு 30 லட்சம் டன் கோதுமையை கையிருப்பில் வைத்திருக்கும். ஆனால், தற்பொழுது கையிருப்பில் உள்ள கோதுமையின் அளவு இதை விட மிகவும் அதிகமாக உள்ளது. இந்திய உணவு கழகம், அதிக அளவில் கோதுமையை கொள்முதல் செய்து வரும் வேளையில், அதனை கையிருப்பில் வைப்பதற்கு போதிய இட வசதியும் இல்லாமல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமையின் விலை, உள்நாட்டு விலையை விட மிகவும் குறைவாக உள்ளது. எனவே, இதன் மீது இறக்குமதி தீர்வை விதிக்க வேண்டும் என பல்வேறு அமைப்புகள் கோரி வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு, மத்திய வர்த்தக அமைச்சகமும், வேளாண் அமைச்சகமும், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் செயல்படும் அமைச்சர்களின் சிறப்பு குழுவிடம் இது குறித்து முடிவு எடுக்கும்படி தெரிவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

பணவீக்கம்

குறிப்பாக, உணவு அமைச்சகம், சென்ற ஏப்ரல் மாதத்தில், கோதுமை மீது 40 சதவீதம் தீர்வை விதிக்கும்படி கோரி இருந்தது. ஆனால், நாட்டின் பணவீக்கத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட அமைச்சர்களின் சிறப்பு குழு இது குறித்து எவ்வித முடிவும் எடுக்காமல் ஒத்திவைத்தது.

கடந்த 2008–ஆம் ஆண்டில், உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் உள்நாட்டில் உற்பத்தி குறைந்து போனது போன்றவற்றால், சென்ற 2009–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோதுமை இறக்குமதி மீதான தீர்வை முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

ரபி பருவம்

இந்த நிலையில், நடப்பு 2010–11–ஆம் ரபி சந்தைப்படுத்தும் பருவத்தில், உள்நாட்டில் கோதுமை உற்பத்தி 8 கோடி டன்னுக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கோதுமை இறக்குமதி மீது தீர்வை விதிக்கும் அதே நேரத்தில், மத்திய அரசு, இதன் ஏற்றுமதி குறித்து எவ்வித முடிவும் எடுக்கவில்லை என அரசின் உயர் அதிகாரி மேலும் கூறினார்.